
Saint Fidelis of
Sigmaringen

## ஏப்ரல் 24

## *புனித சிக்மரிங்கன் பிதேலியார் (1577 – 1622)*

இவரது பழைய பெயர் மார்க்ராய். ஆறு ஆண்டுகளாக இவர் வக்கீல் வேலை பார்த்தார். "ஏழையின் வக்கீல்" என்று இவரை அழைப்பார்கள். இவர் குருப்பட்டம் பெற்று கப்புச்சின் சபையில் சேர்ந்து பிதேலிஸ் என்ற பெயரைத் தெரிந்து கொண்டார். இவர் கடும் தவ முயற்சிகளை செய்வார். வாய்ச்சாலகமாக மறையுரைகள் நிகழ்த்துவார். திருச்சபையை விட்டுப் பிரிந்தவர்களை மனந்திரும்பும்படி உயிராபத்துக்களையும் கவனியாமல் இவர் உழைத்து அநேகரை மனந்திருப்பினார். எப்படியாவது ஒரு நாள் வேதத்துக்காக கொல்லப்படுவேன் என்பதை இவர் முன் அறிந்திருந்தார். இந்த உயர்ந்த பதவிக்காக தம்மைத் தயாரித்தார். பீடத்தின் முன் முளந்தாளிட்டு நெடுநேரம் செபித்தார். பாவசங்கீர்த்தனம் செய்தார். பின் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். பிரசங்கத்தின் முடிவில் இவர் பரவசமானவர்ப் போல் இருந்தது. பின்னர் தமது சாவை அநேகருக்கு முன் அறிவித்தார். செவிஸ் என்னும் நகரத்திற்கு அவர் செல்லும் போது எதிரிகள் அவரைச் சந்தித்து, கல்வினிஸ்ட் பதித சபையில் சேரும்படி அவரை வற்புறுத்தினார்கள். அவர் இணங்காமையால் அவரைக் கொன்றார்கள். தம்மைக் கொன்றவர்களுக்காக செபித்துக் கொண்டே அவர் உயிர்விட்டார்.

### சிந்தனை:

திருப்பேழை முன் செபித்து வாழ்வின் துன்ப துயரங்களை செயிக்க பலம் பெறுவோமாக.

### செபம்:

திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, எங்கள் விசுவாசத்தை பலப்படுத்தியருளும்.